Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 10.

[புத் - சுசு] யாழ்ப்பாணம்:- ஜயஙூ மாசி மீ ௨௦ உ வெள்ளிக்கிழமை (4 MAR 1955) [இல-௪அ]


அரசியல் அலை:

## ............ ஒன்று சேருங்கள் என்று உபாயஞ் சொல்லிவிட்டாற் போதுமா?

## ஒற்றுமைக்கு வழி எதுவென உரைப்பாரில்லையே!

நாடகக்கலைஞர் திரு சண்முகத்தையும் அவரின் சகோதரன் திரு. பகவதியையும், அவர்கள் குழுவினர்களையும் யாழ்ப்பாண மக்கள் பேரார்வத்துடன் வரவேற்றார்கள் என்றும் கொழும்பு இந்துக்கல்லூரிக் கட்டிட நிதிக்கு நாடக அபிமான வழியாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பொன் வழங்கினார்கள் என்றும் பாராட்டுரை பகர்ந்த பாராளுமன்ற மேலவை அங்கத்தினர் திரு. சோ. நடேசன் அவர்கள் தமிழர்கள் இப்போதைய நிலையிற் கட்டாயமாக ஒன்றுபடுதல் வேண்டும் என்று சென்ற ஞாயிற்றுக்கிழமை, மனோகரா படமாளிகையிற் பேசும்போது குறிப்பிட்டார்.

நல்லதொரு உபாயம்! எல்லாத் தலைவர்களும் இவ்வண்ணமே போசனை கூறுகின்றார்கள், ஆனால் எவ்வாறு இந்த ஒற்றுமையைக் கொணர்விக்கலாம் என்று மட்டும் ஒருவரும் உரைப்பதாகக் காணப்படவில்லையே. பசியால் வாடிப் பரிதவிக்கின்றவர்களைப் பார்த்துப் பசிமாறுவதற்கு நல்லாகச் சாப்பிடுதல் வேண்டும் என்று அநுதாப உரை கூறுவது போல ஒற்றுமையின்றித் திகைத்து நிற்கும் தமிழ் மக்கள் ஒருங்கு சேருதல் வேண்டும் என்கின்றார்களேயன்றி ஒன்று படுவதற்கு உபாயம் யாரும் காட்டுகிறார்களில்லையே!

தமிழினம் கட்சி மாயையிற் சிக்கிக் கொண்டு அமிழ்ந்து கிடக்கின்ற நிலையிலே திருவருளாலன்றி ஒரு வழியும் காண முடியாது. கட்சிகள் எல்லாம் ஒன்று படுவது முடியாத காரியம் தலைவர்கள் ஒருவரையொருவர் தாக்கிப் பேசி எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றியது போலப் பிளவைப் பெருப்பிக்கின்றார்களேயன்றி ஒற்றுமைக்காய் உழைக்கின்றார் அல்லர்.

இந்த நிலைமையிலே கட்சிகள் யாவற்றையும் குலைத்துவிட்டு இதுவரை ஒருபொழுதும் அரசியற் றலைவராயில்லாத ஒரு பெரியாரை ஒற்றுமை இயக்கத்தின் தலைவராய் அழைத்து ஆக்கவேலை செய்தலே புத்திசாலித்தனமாகும்.

### திரிசிங்களத் திருநாவுக்கரசர்...!

சுவாமி திருநாவுக்கரசு என்ற நாமகரணத்தைத் தாங்கி முன்னாள் அன்பின் திருவுருவாய் அடியார்க்கடியாராய் விளங்கிய அப்பர் சுவாமிகளின் பெயருக்கு இழுக்குத் தேடிநிற்கும் திரிசிங்களத் திருநாவுக்கரசு என்பார் யாவர்? எங்கு பிறந்தவர், எந்த இனத்தைச் சேர்ந்தவர், எம்மொழியிற் பேசுபவர் என்றெல்லாம் திரிசிங்களப் பொழுதையார் விபரங்கள் வெளியிடப்படாதா? இந்தத் திரிசிங்களத் திருநாவுக்கரசு என்பார் தமிழாத்தாரை ஒருமுறை தரிசிக்கக் கூடாதா? தரிசித்து தமது அரிய மதிமொழிகளை உதவுதல் ஆகாதா? குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பாயிருக்கமாட்டார் இவர். குலத்தை மறைத்துக் கோலம் போட்டவராயிருப்பாரா என்று ஐயுறவு கொள்வார்க்கெல்லாம் இவர் தமது விசுவரூபத்தைக் காட்டி உண்மையை வெளியிடப்படாதா........?

### மது விலகுமா?

மதுவும் குதிரைப் பந்தயமும் சட்டமூலம் விலக்கப்படவேண்டும் என்று ஸ்ரீ டட்லி சேனநாயக ஐக்கிய தேசியக் கட்சிக் கூட்டத்தில் கொண்டுவந்த பிரேரணை பெருந்தொகை அங்கத்தவர்களின் ஆதரவுடன் அங்கீகரிக்கப்பட்டு விட்டதாம்.

### இலங்கை சனநாயக மகாநாடு

இலங்கை சனநாயக மகாநாட்டுக் கூட்டம் ஒன்று 6-3-55 ஞாயிறு பிற்பகல் 5-30 மணிக்கு யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் நடைபெறுமென்றும் தலைவர் தி.. எஸ். தொண்டைமான் முதலியோர் அத்தருணம் பேசுவார்களென்றும் அறிய வருகின்றது.

## திருவள்ளுவர் திருநாள்

மாசி 25உ புதன்கிழமை (9-3-55)

"நல்லை நகர் நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே" என்று எல்லவரும் ஏத்தும் நாவலர் பெருமான் வகுத்துவைத்த திருவள்ளுவர் திருநாள் மாசி மீ 25 உ (9—3—55) புதன்கிழமை வருகின்றது. நாவலர் திருநாளிலே நாவலர் பெருமானைச் சொல்லளவில் எல்லையில்லாது புகழ்ந்து, செயலில் பெரியோரைப் பேண வேண்டிய பேரெல்லையைக் கடந்து சனநாயக முறையில் எண்ண வேறுபாடுடையோர் எண்பெருக்கை எடுத்துக்காட்டி, நாவலர் பெருமான் வகுத்து வைத்த நாளுக்கு இழுக்குண்டாக்கி ஒழுகுவோர் உரைகளை உள்ளத்திற் கொள்ளாது நாவலர் பெருமான் குறித்த மாசி உத்திரத்தில் (மாசி 25உ) சைவ மக்களாகிய நாம் யாவரும் திருவள்ளுவர் குருபூசையை நன்கு செய்வோமாக.

"ஆற்றவா ராற்ற விசுழாமை
போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை"

என்ற திருவள்ளுவர் திருவாக்கே நாம் உய்தி பெறியடைதற்கு என்ஞான்றும் உறுதுணையாய் விளங்குவதென்பது நாம் உள்ளுந்தோறும் எமக்கு இன்பம் பயப்பதென்க.

—அறநெறியோர்.

### தாழ்த்தப்பட்ட வகுப்பார் நிலைமை

வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடந்த சமூக சேவா சங்கப் பிரதிநிதிகள் மகாநாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பார் வாழ்க்கை நிலைமை பற்றி விசாரிப்பதற்கு ஒரு சபை அமைக்கவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்கும் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டது.

### யாழ்ப்பாணப் பிரிவு சனசமூக நிலைய காரியதரிசிகள் மகாநாடு

மேற்படி மகாநாடு சென்ற 12-2-55 ல் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியிற் கூடியது. நிலையங்களும் நிலையங்களின் சமாசமும் செவ்வனே நடைபெறச் செய்தற்குச் சில பிரேரணைகளை நிலையச் சமாச வருடாந்தக் கூட்டத்திற் சமர்ப்பிப்பதற்காகப் பல பிரிவுகளிலிருந்தும் 9 பிரதிநிதிகள் தெரியப்பெற்றனர். இதன் செயலாளராக திரு. சி. சிவரத்தினம் (ஆசிரியர்) தெரியப்பெற்றார்.

பிரேரணைகள் எதிரில் வரும் சமாச வருடாந்தக் கூட்டத்தில் எடுக்கப்படவேண்டுமென்றும் அவற்றை ஸ்தலஸ்தாபனக் காரியாதிகாரிக்கும் அறிவித்து தக்க நடவடிக்கைகளைக் கையாளவேண்டும் என்றும் கேட்கப்பட்டிருக்கிறது. குறித்த பிரேரணைகள் சமாசக்காரியதரிசிக்கு அனுப்பப்பட்டன.

## கச்சியப்பர் காட்டும் காஞ்சி

### பண்டைப் பண்பாடு காட்டிப் பேருவகையளிக்கும் சிறப்பு

ஸ்ரீ வ குகசர்மா

நாடு நகரம் ஆகியவற்றின் சிறப்புக்களை வர்ணித்தல் பண்டைய இலக்கியங்களின் மரபு. பெரும் காப்பிய இலக்கணத்திற்கு உதாரணமாக தண்டியலங்கார உரையாசிரியர்கள் காட்டும் காவியங்களில் கந்தபுராணமும் ஒன்றாகும். இப்பெருங் காப்பியத்திலே வர்ணிக்கப்படும் நாடு தொண்டைநாடு. நகரம் காஞ்சி நகரம். இப்பகுதிகளை ஆழ்ந்து படிப்பதனால் மனநிறைந்த இன்பம் பயப்பதோடு தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களையும் நாம் ஒருவாறு அறிந்து கொள்ளுதல் கூடும்.

கச்சியப்பர் காலம் விஞ்ஞான அற்புதங்கள் கண்டு பிடிக்கத் தொடங்கிய காலத்திற்கு பல நூற்றாண்டுகள் முந்தியது என ஆராய்ச்சி வல்லுனர் கூறுவர். ஆனால் அவர் காஞ்சி நகரத்தின் அழகைக் கூற ஆரம்பிக்குமிடத்திலே விஞ்ஞான அற்புதம் காணப்படுகிறது. காஞ்சி நகரத்தைச் சுற்றி மதில் கட்டப்பட்டிருக்கிறது. அம்மதிலில் பாவைகள் வைக்கப்பட்டிருந்தன. வெறும் பாவைகளல்ல, யந்திரப் பாவைகள். அவை

"பகைவர்களை வெட்டும், அடிக்கும், எடுத்து எறியும், அம்புகளைச் செலுத்தும், கற்களால் எறியும், முரசம் அடிக்கும் இவ்வாறு பல தொழில்களை இயற்றிடும். அவற்றின் பெருமையைக் கூறமுடியாது" என்று சொல்லுகிறார் ஆசிரியர். அம்புகள் செலுத்தலும் மாத்திரமல்ல பிறர் செலுத்தும் அம்புகளைத் தடுத்துவிடுமாம். அந்தப் பொறிகள் செய்யும் செயல்கள் ஒரு இலவறலை ஆசிரியர் சொல்வதைப் பார்ப்போம்.

"திமுழும் வெங்கனலுமிழ்ந்திடு
மொன்னலர் செலுத்தும்
பகழி மாரியை விழுங்கிடும்
பறவையிற் படரு
மிகழு ராவையும் மனர்தையு
மெறிந்திடு மென்னாற்
புகழு சீரவன் நம்மதின்
மேலுறும் பொறிகள்"

தற்கால நாடுகளுக்கு இவ்வாறான ஒரு பாதுகாப்பு தேவையென விஞ்ஞானிகள் விரும்புவார் என்பதற்கையமில்லை.

ஒரு வீட்டில் பலர் சேர்ந்து வாழ்கிறார்கள். அவர்கள் ஏதோ ஒரு காரணத்திற்காகப் பிரிந்து செல்கிறார்கள். பல காலம் கழித்துத் திரும்பி வருகிறார்கள். அப்போது வீட்டில் உள்ளவர்கள் வருபவர்களை மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள். அன்றைக்கு அவர்களுக்கு விசேட இனிய உணவளிப்பார்கள். அவ்வாறான அன்பையும் இனிய உணவையும் அளிக்கிறார்கள் காஞ்சிபுரத்தில் உள்ள மக்கள் தங்கள் விருந்தாளிகளுக்கு. விருந்தோம்பல் தமிழரின் வாழ்க்கை இலட்சியம். "இருந்

[தொடர்ச்சி 6ம் பக்கம்]

வாழ்க்கச்சணர்வானவர் ஞனிவம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்கதீயதெல்லாம் அரனாமமே
சூழ்கவையகமுந் துயர்தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

யாழ். ஜய ஹூ மாசி மீ 20 உ வெள்ளிக்கிழமை

## மது ஒழிந்தால் பதவியைக் கைவிடுவாராம்.. .... ...!

அரசியல் ஆதிக்கம் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி ஆண்டுக்கூட்டத்தில மது ஒழிக்கப்படுதல் வேண்டுமென்று திரு. D. சேனநாயக கொணர்ந்த யோசனைக் கூற்று மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டதல்ல நூதனம் — பொல்லாதது என்று எல்லாராலும் இகழப்படும் போதைப் பொருளைக் கட்டளைச் சட்டமூலமாக விலக்குதலைப்பற்றி எழும் விபரீத விளக்கங்களதான் ஆச்சரியத்தை விளைவிக்கின்றன.

ஐ. தே. கட்சியினர் செய்தமுடிவு வாய்வேதாந்தமாக இருக்கலாம்; வெற்றுரையாய் விசுங்காற்றோடு எற்றுண்டு போகலாம். ஆனால் பொறுப்பு வாய்ந்தவர்கள் அரசியல் அநுபவம் உள்ள தலைவர்கள் வாய்ப்பேச்சளவிற்றானும் மதுவொழிக்கப்படுதல் வேண்டும் என்று முடிவு செய்தமை போற்றப்படுதல் வேண்டும். அவ்வாறின்றிக் கொழும்புமாநகர ஆங்கிலச் செய்தித்தாள்கள் இந்த முடிவுக்கு வந்த பெரியார்களை எள்ளி நகைகாடி அரசியல் நாடக வேடதாரிகள் என்றெல்லாம் அவதூறான பழியுரைக்கு ஆளாக்கிவிட்டன என்பதை நோக்குமிடத்து இந்நாட்டிலே நீதி நெறிக்கு இடம் இருக்கமாட்டாது போலத் தோன்றுகின்றது. அவ்வளவோடமையாது ஒரு அமைச்சரின் செயலாளராகும் பாராளுமன்ற மேலவை அங்கத்தவர் ஒருவர் மது ஒழிப்புச் சட்டம் உருவாகுமேயானாற்றனது பதவியை விட்டுத் தாம் விலகநேரிடும் என்று மாவை உபதேசச் சபதம் செய்திருக்கின்றாராம்........!

இவ்வாறு மதுவொழிப்புச் சட்டத்திற்கு மாறாகப் போராட எழுந்திருக்கும் அத்தனைபேரும் மேடைப் பேச்சு நடத்தும்போதெல்லாம் இந்நாட்டின் கொலைகுற்றம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டு வருவதற்குக் குடியே ஏது என்று சொல்லாமல் செய்தித்தாள்களில் எழுதாமல் விட்டதில்லை.

இது ஒருபுறம் இருக்க, திரு. சேனநாயக தமது கட்சியின் பாராளுமன்றக் குழுவினர் கூட்டத்தில்முந்திய முடிவைத் தொடர்ந்து கொண்டு வருவதாக இருந்த மதுவொழிப்பு யோசனையை விவாதத்திற்கு விடாது கிடத்தி வைத்தார் என்று அறியக்கிடக்கின்றது. இதற்குக் காரணம் கட்சி முடிவுக்கு அக்கட்சியினர்பாராளுமன்றக் குழுவினர் கூட்டத்திலே எதிர்ப்பு இருக்கும் என்ற அச்சமேயாகும். கட்சிக் கூட்டத் தீர்மானத்தை அக்கட்சிப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் ஆதரிக்காது விடுவதென்றால் ஒழுக்கக் கட்டுப்பாடில்லையா? திரு சேனநாயகவின் அபிமானம் வாய்வேதாந்த எல்லைக் கப்பாற் செல்லவில்லைப்போலும்.

மதுவொழிப்பு எதிர்ப்பாளர்கள் பனை தென்னை முதலியன மனிதனுக்குக கள்ளைக் கொடுப்பதற்காகவே தோன்றியனவென்ற முறையில் வாதாடுவதும் குற்றங்களைச் சட்டங்களாலே தடுக்க முடியாது என்று சொல்வதும் அவர்களின் அறியாமையை நன்கு விளக்கும். தமிழ்ச் சான்றுபு சான்ற ஈழத்தின் நிலைமை இவ்வாறு மாறிவிட்டதென்றால் யார்தான் என்ன செய்தல் முடியும்?

---

காங்கேசந்துறை சைவநோயாளர் சபையின்

## வேண்டுகோள்

காங்கேசன்துறை அரசினர் வைத்தியசாலையில். காசநோயாளர் என்னும் பகுதியில். சைவநோயாளர்களுள் துர்ப்பாக்கியசாலிகளாகிய ஆண்களும் பெண்களுமாக, 175 பேருக்கு மேலானோர், கடந்த சில ஆண்டுகளாகச் சிகிச்சை பெற்று வருகின்றனர். தீராதநோய் தீர்த்தருள வல்லான் முருகப் பெருமானைக் கோவில் வடிவிலமைந்த விமானமொன்றில்வைத்து காலையும், மாலையும், மற்றைய ஏனைய நேரங்களிலும், திருநாட்களிலும் தேவாராதனை, முதலியவை சைவ நோயாளர்களாகிய நாங்கள் ஒன்றுகூடி நடாத்தி வருகிறோம். எங்கள் கூட்டுப் பிரார்த்தனைக்குப் போதிய, பூசா திரவியங்களுக்காகவும், அத்தோடு எங்கள் கூட்டுப் பிரார்த்தனை மண்டபம் போதிய இடவசதியின்மையாலும், அம்மண்டபத்தைக் கொஞ்சம் விரிவாய்க் கட்டுதற்குப் பணவசதியின்மையாலும் அதிகம் கஷ்டப்படுகிறோம். ஆகவே சைவ அன்பர்களே! தங்கள் ஆதரவில் எங்கள் சபைக்குத் தங்களாலியன்ற பணவுதவி புரியுமாறு தங்களைத் தாழ்மையாகவும் அன்போடும் சைவநோயாளர் சார்பாக வேண்டிக்கொள்ளுகின்றேன். தாங்கள் புரியும் உதவியை கனம் D. M. O. அவர்கள் மூலமாக சைவநோயாளர் சபைக் காரியதரிசிக்கு அல்லது தனுதிகாரிக்குக கொடுக்குமாறு எழுதவும் எனச் சைவ நோயாளர் சபைக் காரியதரிசி வேண்டுகின்றார்.

---

## பாடிகாவலரும் சர்வகலாசாலைமாணவரும்

கொழும்பில் சர்வகலாசாலை மாணவர் கொண்டாட்டமொன்று நடந்தபொழுது மாணவர் சட்ட எல்லை கடந்து முறையீனமாக நடந்தார்களென்றும் பாடிகாவலர் பகுதியாரும் மாணவரும் அத்தொடர்பில் முரண்பட்டுக் காயம் உண்டாக்கிக் கொண்டார்கள் என்றும் உபவேந்தர் கலாநிதி நிகொலஸ் ஆற்றிகல அவர்கள் சென்று நிலைமையைச் சமாளிக்க வேண்டியதாயிற்றென்றும் அறியவருகின்றது,

---

## ஆந்திரா தேர்தல் முடிவுகள்

ஆந்திராவில் நடக்கின்ற தேர்தலில் இற்றைவரையில் அறியவந்த முடிவுகள் பின்வருமாறு:—

ஐக்கிய இந்திய தேசிய மகாநாடு 56. பெர்துவுடைமை 3. பி. சனசமூகம் 5 சுயேச்சை 8. மொத்தத் தொகை 72.

---

## திருவிழாவும் சைவப்பிரசங்கமும்

ஊரெழு வீரகத்தி விநாயகர் கோவிற் பெருந் திருவிழாக்கள் மாசி 14-ம் நாள் கொடியேற்றத்துடன் சிறப்பாக நடைபெறுகின்றன.

சைவ மரபுக்கிணங்க இம்முறை விழாக் காலத்திலே சைவப் பிரசங்கங்கள் முறைப்படி நடைபெற்றன மூன்றும் திருவிழா உபயகாரர் திரு. க இராசலிங்கம் அவர்கள் அனைவும் இந்த ஒழுங்கை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம் பெரிய நீதிபதி திரு. P. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் தலைமையில் சைவ அன்பர்கள் பலர் சமுகத்தில "ஆலய வழிபாடு" என்னும் பொருள்பற்றி திரு. கம. சிவப்பிரகாசம் அவர்கள் சொற்பொழிவாற்றினர்.

திரு ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் இக்காலத்தில் ஆலய வழிபாடு மிகமிக அவசியமென்றும் சைவ வாழ்க்கை முறையைச் செவ்வனே நடத்துவதற்கு இது இன்றியமையாது வேண்டப்படுவதென்றுங் கூறினார்.

---

## பொய்சொல்லாத கள்வன்

—0—

கச்சாய் அம்மன்கோவிலில் வெள்ளி விக்கிரகமொன்றைக் களவாடிய நத்த கள்வன் சாவகச்சேரி நீதிபதிமுன்னிலையில் களவை ஒப்புக்கொண்டு விட்டானும். கள்வன் நவாலியூரைச் சேர்ந்த காத்தி செல்லையாவாம். இத்துறையில் நடிக்கும் பிற களவுகளுக்கும் இது ஒர் துப்பாகக்கூடுமா என்று கருதப்படுகின்றது,

---

## புத்தகுருமார் விழையும் சனநாயகம்!

கம்பளை கங்க சிறிபுர எக்சத் பிக்கு மண்டலய என்னும் புத்த குருமார் சங்க வருடாந்தக்கூட்டத்திலே சிங்களமே அரசாங்க மொழி ஆதல் வேண்டும், சிங்கக்கொடியே எவ்வித திருத்தமுமின்றித் தேசியக்கொடி ஆதல்வேண்டும். கிறிஸ்தவர்களின் பொருள்கள் அரசாங்க ஆணைக்குள் இருக்கவேண்டும் என்று மூன்று பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டனவாம்.

---

# உங்கள் நக்ஷத்திரம்?

எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

இவ்வாரப் பலன்கள், 6—3—55 —— 12—3—55

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதம்கால்.

இந்தவாரம் உம்முடைய எல்லாக் காரியங்களிலும் விட்டுக்கொடுத்து வெல்லும் முறையைக் கையாளுக. குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு. தேகசுகமும் நல்லாயிராது. நீர் சித்திபெறுதற்கு மிக முயன்று உழைக்கவேண்டும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

இந்தவாரம் தளப்பமில்லாமல் காசு வந்துகொண்டிருக்கும். நீர் சில காணிகளில் காசைவிடக்கூடும் எல்வித காரியங்களுக்கு நல்லகாலம் தடைகள் நீக்கப்படும்

**மிதுனராசி** மிருகசீரிடம், 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இந்தவாரம் காசுக் கொடுக்கல் வாங்கல்களிற் கவனமாயிருக்கவும். நீர் கொடுக்கும் எவ்வித பணமும் திரும்பி வாராமல் விடக்கூடும். பிதா வழி இனத்தவர் உமக்குக் கொஞ்சம் நோயம் மூட்டக்கூடும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

ஒரு தளப்பமான வாரம். இன்றியமையாத வேண்டப்படும் வசதிகளே உமக்கு இல்லாமலிருக்கும் கந்தோரில் அலைந்து வியாபார நிலையத்தில் குழப்பங்களுக் கிடமுண்டு ஒன்றையும் புதிதாய்த் தொடங்க வேண்டாம்,

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம், 1ம் பாதம்.

பின்னுக்கு உமக்கு உதவக்கூடிய நல்ல தொடர்பான் உண்டாக்குவீர் புது முயற்சிகள் நல்ல பலனைத் தரும் ஆனால் சில குடும்பக் குழப்பங்களுக்கிடமுண்டு.

**கன்னிராசி** உத்திரம் 2,3,4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

முதல் இரு நாட்களும் உம்மைச் சில ஆபத்துக்குள்ளாக்கக் கூடும் இனத்தவர்களுடன் முரண்பாடுகளைத் தவிர்க்கவும். சுகவீனந்திர இடமுண்டு. ஆனால் அது ஆபத்தானதாயிருக்கமாட்டாது.

**துலாமசித்திரை** 3,4ம் பாதம். சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

இந்தவாரம் குடும்பச்சூழலில் சுகவீனத்துக் கிடமுண்டு செலவதிகரிக்கும் ஆனால் அவற்றைச் சமாளிப்பதற்கு வேண்டிய பணம் பெறுவீர். செவ்வாயும் புதனும் கவனமாய்க் கழிக்கவேண்டும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

இந்தவாரம் உம்முடைய நண்பர் என்று சொல்லப்படுகின்ற சிலருடைய இருபக்கமும் பாடும் கபடச் செயல்களை நீர்கண்டுபிடிக்கக்கூடியதாய் இருக்கும். மனச் சலனத்துக்கும் அவமானத்துக்கு மிடமுண்டு. புதன் பிற்பகலும் வியாழனும் வெள்ளி காலையும் எல்லாவற்றிலும் பழுதானவை.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1 பாதம்.

கடைசி இரு நாட்கள் தவிர இந்தவாரம் நல்லாயிருக்கும். தனலாபமும் புகழும் நிச்சயம், ஆனால் தேகசுகம் நல்லாயிராது.

**மகராராசி** உத்தராடம் 2,3,4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்தவாரம் எந்த ஒரு நல்ல காரியத்தையும் செய்ய நீர் அமைதியாயிருக்க முடியாமலிருக்கும் சிறு சுகவீனங்களுக்கும் குடும்பக்கவலைகளுக்குமிடமுண்டு ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ம் பாதம்.

இந்தவாரம் குடும்பக் காரியங்களில் சில மாற்றங்களுக்கிடமுண்டு. சிறிது பிரயாணமும் நீர் செய்ய வேண்டிவரக்கூடும். தனலாபம் நிச்சயம், ஆனால் செலவும் அதிகமாயிருக்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

இந்தவாரம் சண்டை தொடுக்க நீர் முந்துவீர். ஆராயாது காரியங்கள் செய்வதைத் தவிர்க்கவும். குடும்பக் குழப்பங்கள் உம்முடைய மனச்சமாதானத்தைக் குலைக்கும், புணர்ட்டத்துக்குமிடமுண்டு.

# தம்மைத் தாம் தாழ்த்துவர் பெரியோர்

## சமயாசாரியர் காட்டிய சைவநெறி

"நாயேன் யாதினையறிந்து என் சொல்லிப் பாடுகேன்" என்று நம்பியாரூரர் கேட்கப் "பித்தனென்றே பாடுவாய்" என்று இறைவன் அடியெடுத்துக் கொடுக்க "பித்தா பிறைசூடி" என வரும் பாடலை முதன்முதலாக சுந்தரர் அருளிச் செய்தார்.

பாற் கடலில் தோன்றிய அமுதம் குறைபாடுடையது. அது தன்னை உண்டார்க்கு மெய்ஞ்ஞானத்தை அளிக்கவில்லை. இறப்பையும் தடுக்கவில்லை. ஆனால் இறைவனாகிய அமிர்தம் பேரின்பத்தை அளித்து மரணமிலாப் பெருவாழ்வையும் அருளுமாதலால் "உணர்வு தந்து உய்யக் கொண்டகோ திலா அமுதே" என்பதாகக் கூறினார்.

இறைவன் நிர்க்குணனாயினுமே! குணப் பெருங் கடல் என்று கூறியது என்னையெனின் மாயா சம்பந்தப்பட்ட முக்குணங்களும் இறைவனுக்கு இல்லை என்ற பொருளே தவிர குணமே இல்லையென்பதல்ல. இறைவன் எண் குணத்தனுவான்.

'சுந்தரர் 'நாயேன்' என்று பலவிடங்களில் (26 இடங்கள்) தன்னைக் குறிப்பிட்டுள்ளார். தான் பாடிய முதற்பதிகம் 2-ம் பாடலில் 'நாயேன் பலநாளும்' என்று ஆரம்பிக்கின்றார். முடிவில் பாடிய நொடித்தான் மலைப்பதிகத்து முதற் பாடலாலும் தன்னை நாயேன் என்று குறிப்பிடுகின்றார். (நாவுக்கரசர் 37 இடங்களிலும் மாணிக்கவாசகர் 59 இ இடங்களிலும் தங்களை நாயேன் என்று குறிப்பிட்டுள்ளார்கள்) இவ்வாறு பெரியோர்களெல்லாம் தங்களை நாயேன் என்று குறிப்பிடுவதற்குரிய அடிப்படையாது? எக்காரணம் பற்றியும் தங்களை எண்ணத்திலும் பெரியவர்கள் என்று கருதாதவர்கள் எவர்களோ அவர்களே பெரியோர்கள் என்று பேசப்படுபவர்களவர். அவர்கள் எப்பொழுதும் தங்களைத் தாழ்த்தியே கூறுவது இயல்பு. 'யாவர்க்குமேலாயளவிலாச் சீருடையான் யாவர்க்குங் கீழாமடியேன்" என்று மாணிக்கவாசகர் கூறுவதைக் கவனிக்க. "தாழ்ந்தோர் உயர்வரென்றும் மிகவுயர்ந்தோர் தாழ்வரென்றும் அறஞ் சூழ்ந்தோர் உரைக்கும் உரை" என்பது சிவப்பிரகாசர் கூற்று. தம்மைத் தாழ்த்திக் கொள்வோர் பிறரால் உயர்த்தப்படுவார் என்பதும் தம்மை உயர்த்திக்கொள்வோர் பிறரால் தாழ்த்தப்படுவார் என்பதும் இதன் கருத்து. அங்ஙனம் தாழ்த்திக் கூறுவார் நாயேன் என்று தங்களைக் கூறுவது நாயினிடத்துள்ள உண்டதையே கக்கி உண்ணுவதும் குறிக்கோளில்லாது ஓடித் திரிவதும் ஆகிய இழி குணங்களைக் கருதியே.

'நாயிற் கடையேன்' என்று மணிவாசகர் பலவிடங்களில் தம்மைக் கூறிக்கொண்டது நாயினிடத்துள்ள ஒருசில நற்குணங்களும் தம்பாலில்லை என்று தம்மைத் தாழ்த்தி உரைத்ததாகும். நாயினிடத்துள்ள நற்குணங்களாவன, ஒரு பிடி அன்னமிட்டாரை உயிருள்ளளவும் மறக்காத நன்றியறிதலும், தன் தலைவன் எவ்வளவு கூட்டத்திலிருப்பினும் அவனை அறிந்து கொள்ளுந் திறனும்,

### ஞானசம்பந்தம்

இட்ட கட்டளையை இடரேவரினும் உடனே நிறைவேற்றமுள்ளமும், கோபத்தால் ஒருவேளை தன் தலைவன் ஊறு விளைவிப்பானாயினும் வாலைக் குழைத்து நன்றியே காட்டுவதும் முதலியன. மேலும் நாய் தனக்கு ஊறு செய்த பொருளைக் (கல், கம்பு முதலியன) குறித்து வருந்தாது அவற்றால் ஊறுவிளைவித்த மாற்றாரையே கோபிக்கும். (ஆனால் மனிதர்கள் தமக்குத் துன்பம் நேர்ந்தால் அது தங்கள் வினை வயத்தால என்பதைக் கருதாது துன்பம் செய்தாரை ஒறுப்பார்கள்).

ஞானசம்பந்தர், நாவுக்கரசர் ஆகிய இருவர் தேவாரங்களிலும், திருக்குறளிலும் ஊறித் திளைத்தவர் நமது சுந்தரர். இது அவரது பாடல்களால் நன்கு அறியப்படுகின்றது (இதற்குப் பல மேற்கோள்கள் காட்டப்பட்டன) 'அவவிலை தொலைவிலை வாய்ந்து" என்ற தொடர் (நந்-6) இதற்கு குறிப்பிடுகின்றது. 'பித்தா' என்றும் 'பிறைசூடி' என்று சுந்தரர் பாடத் தொடங்கியது ஞானசம்பந்தர் தேவாரத் தல வாமதிலைத் திருந்ததேவண்ணேனர் பெருமானே விடைவிடையேறி பெண்ணுண் அலிகுரும் "பித்தா பிறைசூடி" என பது ஞானசம்பந்தர் வாக்கு.

தடுத்தாட்கொண்ட கன் பின் சுந்தரர், இறைவன திருக்கோவில் கொண்டு எழுந்தருளிய பல திருத்தலங்களையும் தரிசிக்கக் கருதித் திருநாவலூர் திருத்துறையூர் முதலிய தலங்கள் சென்று பதிகம் பாடித் தில்லையைத் தெரிசிக்க விரும்பிப் புறப்பட்டார். வழியில் திருவதிகைக்கு அருகில் வந்ததும் அப்பதி நாவுக்கரசர் உழவாரத் திருப்பணி செய்யப்பெற்ற தலமாதலால் அதனை மிதித்துச் செல்ல விரும்பாது அருகிலுள்ள சித்தவடம் என்னும் மடத்தில் தங்கினர். திருவதிகை வீரட்டானேசுவரரைச் சிந்தையிற் கொண்டவராய் உடன் வந்த அடியார்களோடு ஆங்குத் துயில் கொள்ளும்போழ்து இறைவன் முதிய அந்தணர் வடிவங்கொண்டு ஒருவரும் அறியாது உட்சென்று நம்பிகள் தலையில் திருவடி படும்படியாக வைத்துயித துயில் கொள்வார் போன்றிருந்தார். சுந்தரர் விழித்து "அருமறையோய்! உன்னடிகளை என்றலைமேல் வைத்தனையே" என்று கேட்க "திசையறியாது காலை வைத்தது என் மூப்பினால் நேர்ந்தது" என்று முதியவர் கூறினர். பின்னர் சுந்தரர் மற்றோரிடத்தில் தூங்க அங்கும் தம திருவடியை நீட்ட, "சுந்தரர் 'இங்கென்னைப் பலகாலும் மிதித்த நீ யார்?" என்று கேட்க "அறிந்திலையோ" என்று கூறி மறைந்தார்.

வேண்டுமென்றே பல தடவைகள் குற்றம் செய்வார்மீது கோபம் கொள்வது நம்மவர்கள் இயல்பு. ஆனால் சுந்தரர் தமது கோபம் பலித்துவிடுமே எனினும் கோபம் கொள்ளாது "மிதித்த நீ யார்?" என்று கேட்டார். இது அவரது பொறுமையின் எல்லையைக் காட்டுவதாகும். "செலவிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக் காக்கிலென் காவாக்காலென்" என்ற குறள் ஈண்டு நினைவுறத்தக்கது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

### வருகிற ஆண்டில் பொதுத் தேர்தல்

ஐக்கிய தேசியக் கட்சி இளைஞர் சங்க வருடாந்தக் கூட்டத்திலே தலைமை வகித்துப் பேசும்போது வருகிற ஆண்டு ஆனி மாசத்தின் பின் பொதுத் தேர்தல் நடக்கக் கூடும் என்று சேர் ஜோன் கொத்தலாவல சொன்னாராம்.

### வெள்ளி விழாக் கொண்டாட்டம்

அளவெட்டி சதானந்த வித்தியாசாலையின் வெள்ளி விழாத்தினம் இவ்வாண்டு வைகாசிமாதத்தில் கொண்டாட இருப்பதால் அதை முன்னிட்டு சென்ற வியாழக்கிழமை (24-2-55) பிற்பகல் 4 மணிக்கு மேற்படி வித்தியாசாலையில் ஒரு காரிய நிர்வாகசபைக் கூட்டம் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. அ. பொன்னுத்துரை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. வெள்ளி விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு பல உபசபைகளும் தெரியப்பட்டன.

# இந்தியாவிலும் இசை நாட்டிய ஈழத்துச் சான்றோர்

[ "புகலியர்கோன்" புகல்வது ]

### 17. சி. வை. தாமோதரம்பிள்ளை

இவர் யாழ்ப்பாணத்திலே சிறுப்பிட்டி என்னுங் கிராமத்திலே வேளாளர் மரபிலே வைரவநாத பிள்ளை என்பவர்க்குப் புதல்வராயுள்ளவர். தாயார் பெயர் பெருந்தேவியம்மை. இவர் சிறுபிராயத்தில் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலிய நீதிநூல்களையும் நிகண்டு முதலிய கருவி நூல்களையுங் கற்றுவந்தார். பின்னர், சுன்னாகத்திலிருந்த முத்துக்குமார கவிராயரிடத்துத் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று வல்லுநரானார்.

தெல்லிப்பழையிலுள்ள அமெரிக்க பாதிரிமாருடைய ஆங்கிலவித்தியாசாலையில் ஆரம்ப ஆங்கிலக் கல்வியும், அதன் பின்னர் வட்டுக்கோட்டையில், இப்பொழுது யாழ்ப்பாணக் கல்லூரியென வழங்கும் உயர்தரக் கலாசாலையில் உயர்தர ஆங்கிலக் கல்வியுங் கற்றார். சென்னைச் சர்வகலாசங்கத்தார் முதன் முதல் நடாத்திய பி. ஏ. பரீட்சையில் இத் தாமோதரம்பிள்ளையும் யாழ்ப்பாணத்தவரும் இவரது சகபாடியும் ஆகிய ஹரல்ட் விசுவநாதபிள்ளையும் மாத்திரமே சித்தியடைந்தனர். அதன் பின் இவர் அக்காலத்திற் கோப்பாயிலிருந்த போதனா வித்தியாசாலையிற் சிலகாலம் தலைமையாசிரியராக இருந்து பின்பு பேர்சிபல என்னும் பாதிரியாராற் சென்னையில் நடத்தப் பெற்று வந்த "தினவர்த்தமானி" என்னும் பத்திரிகையின் ஆசிரியராகக் கடமையாற்றினர். அதன்மேல், கள்ளிக்கோட்டையிலுள்ள அரசினர் வித்தியாசாலையிலே தலைமையாசிரியராகக் கடமையாற்றினர் புதுக்கோட்டையில உயர்தர நீதிமன்றத்து நீதிபதியாக அரசினரால் நியமிக்கப் பெற்றார். சென்னைச் சர்வகலா சங்கத்தார் தங்கள் பரீக்ஷகருள் ஒருவராக இவரை நியமித்தனர். இவருடைய கல்வித் திறமையையும் கடமையாற்றுந் திறமையையும் பாராட்டி, சென்னை அரசாங்கத்தார் இவருக்கு "ராவ் பகதூர்" என்னும் பட்டத்தை அளித்து இவரைச் சன்மானித்தனர். இவர் காலத்திலே தென்னிந்தியாவிலும், யாழ்ப்பாணத்திலும் விளங்கிய வித்துவான்கள் புலவர்கள் பண்டிதர்கள் உரையாசிரியர்கள் முதலாம் அறிஞருடன் இப் பெரியார் நனகு உறவாடி அவர்களுடைய நட்பைப் பெற்றிருந்தார். இவரது வாழ்க்கையில் அதிக காலம் தென்னிந்தியாவிலேயே கழிந்ததெனலாம்.

சிலகாலம் பாதிரிமாருடைய சகவாசத்தினால் கிறீஸ்துமதத்தை அநுசரித்தும், சைவமதத்திற்கு மாறான கண்டனங்களை எழுதி வெளியிட்டும் வந்த இந்த அறிஞர், பின்னர் ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களுடைய பிரசங்கங்களையும் அந் நாவலப் பெரியார் அக்காலத்தில் எழுதி வெளியிட்டு வந்த கிறீஸ்துமத கண்டன நூல்களையும், முறையே கேட்டும், படித்தும் சைவசமயமே மெய்ச் சமயமென உணர்ந்து, நாவலர் சொற்படி சுத்தி செய்து உண்மையான சைவசமயியானார். விதிப்படி ஆன்மார்த்த பூசையும் செய்துவந்தார். "சைவமகத்துவம்" என்னும் சிறந்த நூலையும் இயற்றினர். நாவலரைப் பின்பற்றி, தாமும் ஏட்டுப் பிரதிகளாகவுள்ள, பழைய இலக்கண, இலக்கியங்களை, பிழையறப் பரிசோதித்து அச்சிட்டு வெளிப்படுத்தினர். இப் பேரறிஞர் அச்சிட்டு

தொடர்ச்சி 4-ம் பக்கம்

மானிப்பாய் மிஷன் வைத்தியசாலைக்கு

## விசேஷித்த புதிய வைத்தியர்

மானிப்பாய் மிஷன் வைத்தியசாலைக்கு பிரபல புதிய வைத்தியர் இருவர் வந்திருக்கிறார்களென அறிந்து சந்தோஷப்படுகிறோம் :—

Dr. W. A. நாயுடு F. R. C S அவர்கள் F R. C. S பட்டம் பெற்றது மாத்திரமல்ல, Berlin, Vienna முதலிய ஐரோப்பிய நகரங்களில் சத்திர வைத்தியம் பயின்றவர். பின் இந்திய அரசியலில் கடமை பார்த்தவர். ஐந்து வருடங்களாய் சென்னைப் பட்டினத்திலுள்ள Staneley வைத்திய கல்லூரியில், சத்திர வைத்திய (Openative Surgery) வைத்திய மாணவருக்குக் கற்பித்தவர். சமீபத்தில் சென்னைத் தேசாதிபதி ஸ்ரீ பிரகாச அவர்களுக்குச் சத்திர வைத்தியஞ்செய்திருந்தவர். Dr. நாயுடுவும் Mrs. நாயுடுவும் சென்ற திங்கட்கிழமை மானிப்பாய்க்கு வந்து சேர்ந்தனர்.

இவரோடு Mrs. சத்தியா M. B. B. S. உம் வந்திருக்கிறா. இவ சென்னை பட்டினத்தில் கஸ்தூரிபாய் ஆசுப்பத்திரியில் பிரசவ வைத்தியர் செய்தவர்—இவ சென்ற புதன்கிழமை வந்து சேர்ந்தனர்.

M. 234. 25-2, 4-3, 11-3.


# தேவார திருவாசக முழக்கம்

### திருக்கோயில்களில் சைவ இளைஞர்கள் செய்வார்களாக

[ தென்மயிலை, திரு. செ. கோவிந்தசாமி வரைவது ]

சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்ட நூல்கள வேதம் — சிவாகமம என்னும் இரண்டுமாம். இந்நூல்களுடன் நாம் பொன்னே போல் போற்றித் துதித்து வரும் நூல்கள் திருமுறைகளாகும். திருமுறைகளுள் தேவாரமும் திருவாசகமும் தமிழ் வேதம் என்று சொல்லப்படும். தமிழர்களுக்கு உயிர்நாடியாக அமைந்த நூல் தேவார திருவாசகமாகும் —புறமதத்தவர்களும் திருவாசகத்தைப் பாராயணம் பண்ணுகிறார்கள்.

சைவ எல்லப்ப நாவலர் சுவாமிகளும் "தேவாரதிருவாசகமும் - நால்வர் பொற்றுளமும் எம் முயிர்த் துணையே" என்றார்கள். இன்னும் எத்தனையோ மகான்கள் தேவாரதிருவாசகாதிகளைப் பொன்னேபோல்போற்றிப் பாராயணம் செய்திருக்கிறார்கள். தற்காலத்தில் சைவ உலகில் தேவார திருவாசகமாதியன ஒதுக்கப்பட்டிருக்கின்றன. திருவருட் பாடல்களைப் படிப்பதற்கு நாகரீகம்—காலப்போக்கு ஆராய்கிறார்கள்.

காலப்போக்கு, முற்போக்கு என்ற காரணத்தைச் சிலர் அடிப்படையில் வைத்துக்கொண்டு நவீன மருட்பாக்களைப் பாடுகிறார்கள்

பிரார்த்தனைக் கூட்டம் வைத்துச் சமயம் பேசுப நவீன சமரச வாதிகளது உள்ளத்திலும் சதசங்க அன்பர்களது உள்ளத்திலும் அருட்பாடல அருட்சிதோன்றவில்லை — நீதி நெறிகளல்லவா இவ்வுலகிலுள்ள அறையன்னைத்தையும் ஒவ்வொரு விமர்ச்சனமாகவே கொள்ளவேண்டியிருக்கிறது வருணாச்சிரம நெறிகளும் நீதி தவறிவிட்டன. பண்டைய அரசர்களும் மக்களும் நீதிமான்களாய் விளக்கினமைகாரணன்றோ சமயாசாரியார்களும் சந்தானாசாரியர்களும் சேக்கிழார் பட்டினத்தடிகள், தாயுமானவர் குமரகுருபரர் போன்ற பெருமக்களும் தாங்கள் சைவத் தலைவர்கள் என்றும் சுவாமிகள் என்றும் தலைகாட்டினார்கள்.

தில்லை நாயகன் திருக்கூத்துக் கும்பிடப்பெற்றதால் அப்பிறவியே சிறந்ததாயிற்று என்று குறிப்பிடுகின்றார். "இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால், மனிதப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே" என்பது நாவுக்கரசர் வாக்கு. இக்குப் பிறப்பாகிய கருவி எதற்காக இறைவனால் கொடுக்கப்பட்டதோ அதற்குரிய செயலில் அது பயன்படும்போது போற்றப்படுவதும் அதற்கு மாறான செயலில் பயன்படும்போது தூற்றப் படுவதும் பெரியோர்களுடைய வாக்கில் வைத்துக் காணலாம். "என்னை வகுத்திலனேல் இடும்பைக்கு இடம் யாது சொல்லே" என்று அருளிய நாவுக்கரசர் மேலே காட்டிய "மனிதப் பிறவியும் வேண்டுவதே" என்று கூறியருளியதோடு "இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே" என்றும் "வாய்த்தது நம் தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமினே"? என்று பாடியதும் மேற்காட்டியதற்குச் சான்றாகும்.

தில்லைத் தெரிசனம் எத்துணைச்சிறப்புடைத்து என்பதைக் குமரகுருபர சுவாமிகள் அருளிய சிதம்பர மும்மணிக் கோவையின் முதல் அகவற் பாவினால் அறியலாம்.

நீதி நெறி அருகி வருமிக்காலத்தில் முன்னைய பெரியார்கள்போல இன்று தலைகாட்டுவது அசாத்தியமாகும். இன்னும் குருலிங்கசங்கம நெறிகளை சீர் குலைந்துவிட்டன. இதனால் இளைஞர்களாகிய மாணவர்கள் தம் மனம் போன போக்கின்படி காலத்தைக் கழிக்கிறார்கள். குருகுலக்கல்வி அழிந்துவிட்டது. இன்று பள்ளி மாணவர்கள் தேவாரம்பாட வெட்கம் அடைகிறார்கள் ஆலயங்களில் நடைபெறும் உற்சவதினங்களில்தேவார திருவாசக முழக்கம் இல்லாது ஒலிபெருக்கிகள் மூலம் சினிமாப் பாட்டுகளைப் பாடுகிறார்கள். இவ்விதம் சைவ மக்கள் தம் வாணாளை வீணாக்குகின்றனர்.

எங்கள் ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் சென்னையில் வசிக்குங்காலத்தில் தேவாரமோதல் குறைந்து கொண்டு வருதலைக் கண்டு அவர் மனம் கொதித்தெழுந்தது தேவாரத்தை விடுத்து வேறு மருட்பா ஓதுகிறார்கள் எனக் கண்டனம் செய்ததினால் பல வழக்குகளும் நாவலர் பேரில் நடைபெற்றன. இவ்வளவு தூரம் நாவலர் ஐயாவுக்கு ஆர்வம் இருந்தது என்றால் அவர் வழித்தோன்றல்களாகிய பள்ளி மாணவர்கள் தேவார திருவாசகங்களைப் புறக்கணிப்பது வருந்துதற்குரியதாகும்.

மூன்று வயசில் தேவாரம் பாடிய ஞானக்குழந்தையாகிய ஆளுடைய அடிகள் அருளிய தேவாரத்தை இளைஞர்களும் ஏனையோரும் படிக்கத் தவறுதல பெரும் பாவமாகும். ஆதலால் சைவ மாணவர்கள் எல்லோரும் தம கிராமக் கோயில்களில் தேவார முழக்கம் செய்யவேண்டும். அதுவுமல்லாமல் ஒவ்வொரு மாணவனும் நாவலர் அன்பில் திளைத்து — இளைஞராய்த் திகழ்ந்த சிவபாத சுந்தரனாரைப்போல் சைவ முழக்கம் செய்யவேண்டும். இதற்கு சைவஇளைஞர்கள் உற்சவம்நடைபெறும் புராதீன தலங்கட்கு தேவார திருவாசக முழக்கம் செய்ய முன்வருவார்களாக!

### சிவராத்திரி தினம்

சென்ற 20-2-55 ஞாயிற்றுக்கிழமை காரைநகர் சிவகாமி அம்பாள் பிரார்த்தனைச் சபையினர் உண்ணா விரதம் பூண்டு இறைவழிபாடு செய்தனர். கோயிலில் விசேட பூசைகளும் நடைபெற்றன. இரவு சைவத் திருமுறைகள் ஓதப்பெற்றன. சுவாமிக்கு நான்குயாமமும் ஆராதனைகள் நடைபெற்றன. காலையில் விரதம் அனுஷ்டித்தோர் அனைவரும் சமுத்திர தீர்த்தம் ஆடி இறைவனை வழிபட்டனர்.

# இந்தியாவிலும் இசைநாட்டிய ஈழத்துச்சான்றோர்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்படுத்திய நூல்களிற் பிரதமானவை:—

தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரை, பொருளதிகார உரை, இறையனாரகப் பொருளுரை, இலக்கண விளக்க உரை, வீரசோழிய உரை, சூளாமணி தணிகைப் புராணம் முதலியனவாம். இவர் தாமாக இயற்றிய நூல்கள் மேலே சொல்லப்பட்ட சைவ மகத்துவம், கட்டளைக் கலித்துறை, சூளாமணி வசனம் ஆதியன வசனநடை மாத்திரமல்லாமற் செய்யுளியற்றுவதிலும் சிறந்தவர். இவர் தமிழ்மொழி விருத்தி செய்யும்படி பழைய தமிழ் நூல்கள் பலவற்றைப் பரிசோதித்து அச்சிட்டதோடமையாது, யாழ்ப்பாணத்தில் உள்ள ஏழாலை என்னுங் கிராமத்திலே சிறந்த ஒரு தமிழ் வித்தியாசாலையையும் தாபித்து நடத்தி வந்தார்.

18. சி. வை.

சின்னப்பாபிள்ளை

இவர் மேற்படி தாமோதரம்பிள்ளையின் தம்பியாராவர். இவரும் தமிழ்மொழி நன்கு அறிந்தவர். இலகுவான இனிய தமிழ் வசன நடை எழுதும் ஆற்றல் உள்ளவர். தென்னிந்தியாவிற் பலகாலம் அரசாங்க உத்தியோகம் வகித்துக் கொண்டு வாழ்ந்தவர். இவரெழுதிய வீரசிங்கன் கதை உதிரபாசம்என்னும் வசன நூல்கள் எவரும் விரும்பிப் படிக்கத் தக்கன. இவர் கவி இயற்றுந் திறமையுமுடையவ ரென்பது இவரது தமையனார் மீது பாடிய இரங்கற்பாவாகிய,

> "கற்றார்க் கினிமையும் சைவர்க்கு
> மாண்பும் கருதி செல்வம்
> அற்றார்க் குதவியும், கல்வி
> கற்போருக் கரும்பொருளும்
> உற்றார்க்கு கீர்த்தியும் கட்டார்க்
> குறுதியுடனறிவும்
> பற்றுருக்கச்சமுந் தாமோதரன்
> பின் பறந்தனவே"

என்னுங் கவியினால் அறியலாகும்.

# தம்மைத் தாம் தாழ்த்துவர் பெரியோர்

( 3 ம் பக்கத் தொடர்ச்சி)

"மிதித்தனை நீ யார்?" என்று பிரகாலத்தில் பதிப்பித்துள்ளனர். அவ்வாறிருப்பின் மிதித்ததினால் சினமுண்டாகி அது காரணமாக வினவினார் என்று பொருள் கொள்ள நேரும். அது சுந்தரரது பொறுமையைக் காட்டாது. சுந்தரர் "நுணங்கிய கேள்விமேலோன் (தடுத்-14) என்பது சேக்கிழார் வாக்கு. ஆதலால் இவர் வாயினின்றும் வணங்கிய மொழியே வருதல திண்ணம். எனவே சுந்தரர் சினம் கொண்டாரில்லை எனபது, உறுதி செய்யப்பெறுகின்றது. தமது முடியில திருவடியை வைத்தருளியவர் சிவபெருமானே என்பதை யறிந்த சுந்தரர், வருந்தித் "தம்மானை யறியாத சாதியார் உளரே" என்ற திருப்பதிகம் பாடி அங்கிருந்து அகன்று திருமாணிகுழி, திருதினைநகர் முதலிய தலங்களை வணங்கிப் பதிகம் பாடித் தில்லையை அடைந்தார். ஈண்டு கனகசபையில் ஆடும் பெருமானை ஐம்பொறிகளின் அறிவெலாம் கண்களே கொள்ளவும், கரணங்கள நான்கும் சிந்தையேயாகவும், குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாகவும் ஒன்றி நின்று வழிபட்டு மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்து "இறைவனே மண்ணிலே வந்து உன்றன் திருநடம் கும்பிடப் பெற்ற பிறவியே எனக்கு இன்பந் தருவதாயிற்று" என்று பதிகம் பாடிப் பணிந்தார்.

"உன்றன் திருநடங் கும்பிடப்பெற்று மண்ணிலே வந்த பிறவியே என்பதை "மண்ணிலே வந்து, உன்றன் திருநடம் கும்பிடப் பெற்ற பிறவியே" என்று விகுதி பிரித்துக் காட்டல் வேண்டும்.

மண்ணிலே தோன்றும்படி பணித்தருளியதும் மானிடப் பிறப்பை எண்ணிக் கலங்கிய சுந்தரர்

# திருவள்ளுவர் திருநாள்

நிகழும் ஜய ௵ மாசி ௴ ௨௫ ௳
(9—3—55) புதன்கிழமை
யாழ்ப்பாணச் சைவபரிபாலனசபை ஆதரவில்

## திருவள்ளுவர் திருநாள்

மேற்படி சபை நாவலர் மண்டபத்தில்
சபைத் தலைவர்
திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை
அவர்கள் தலைமையில் நடைபெறும்

நிகழ்ச்சிகள்

இரவு 6-30—7 கடவுளாராதனை திருவள்ளுவர் பூசை
,, 7—7-30 தமிழ்மறையோதல்
திரு. மு. சுப்பையாதேசிகர் அவர்கள்
,, 7-30—9 பிரசங்கம்
1 "திருவள்ளுவர் ஒரு உலக கவி"
மத்திய கல்லூரித் தமிழ்ப் பண்டிதர்
மகாமகோபாத்தியாய வை. இராமசாமிசர்மா அவர்கள்
2 "திருக்குறள் ஆட்சி"
பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள்
தமிழபிமானிகள் யாவரும் சமுகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
சமயப் பிரசாரசபைக் காரியஸ்தர்

சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம்.
1—3—55

(௧ 200)


# திருக்கேதீச்சரத்தில் மகாசிவராத்திரி

இன்று (20-2-55) பிற்பகல் திருக்கேதீச்சர வித்தியாலயத்தில் அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் பெற்றோர்தினக் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. மாணவ மாணவிகளின் தேவார பாராயணத்துடன் தொடங்கப் பெற்ற கிழா சோதிப் பாடல்கள், கிராமிய நடிப்பு, ஆனந்த நடனம், இயற்கையும் இறைவனும், நட்சத்திர அபிநயக் கும்மி, கோலாட்டம், ஆங்கில சம்பாஷணை அபிநயப்பாக்கள் இன்னும் பலவித நிகழ்ச்சிகளுடன் பல நாற்றுக்கணக்கானவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன், திரு க. சிற்றம்பலம் M.P மன்னார், நீதிபதி திரு K. ஜெயக்கொடி, திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபைக் காரியதரிசி திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோருடன் மற்றும் பல அதிகாரிகளும் பெரியோர்களும் கலந்து சிறப்பித்தனர். சேர். வைத்தியநாதன் அவர்களால் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிச்சபையின் சார்பில் மாணவ மாணவிகளுக்குப் பலவிதமான பரிசுகள் வழங்கப்பட்டு தலைமை ஆசிரியர் திரு. K இராமுப்பிள்ளையின் நன்றியுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது.

பிற்பகல் 4 மணிக்கு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் மடத்தில் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபையின் பொதுக்கூட்டம் அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது. அங்கத்தினர்களும் பொதுசனங்களும் பங்குபற்றி ஆலயப் புனருத்தாரணத்தை அதிவிரைவில் செய்து முடிக்க முடிவு செய்யப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ சைவ சித்தாந்தசரபம் ஈசான சிவாச்சாரிய சுவாமிகளும் மட்டக்களப்பு ஸ்ரீ குமாரசாமி முதலியார் ஸ்ரீ கரு. லெ. லெட்சுமணன்செட்டியார் திரு. A, சிவசுந்தரம் திரு. அருளம்பலம், திரு. வீ. சே. சுப்பிரமணியம், திரு வீ.கே. சின்னையா முதலியோரும் மற்றும் அன்பர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

மாலை 6 மணி முதல் அம்மை அப்பன் சன்னிதியில் சிவராத்திரிபுராணம் படிக்கப்பட்டது. பிரம்ம ஸ்ரீ சி. இராசக்குருக்கள் தலைமையில் மிக விசேஷமான முறையில் அம்மை அப்பனுக்கு நான்குகாலப் பூசையும் நடைபெற்றது. இரவு 8 மணி முதல் சைவசித்தாந்த சரபம் ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாச்சாரிய சுவாமிகளின் சொற்பொழிவும், திருவாரூர் ஓதுவார் திரு. ஆப. தோத்தாசண தேசிகர் அவர்களால் தேவார திருவாசகப் பாடல்களும், வண்ணை திரு. சி. என். எஸ். மணிபாகவதரால் பக்தநந்தனரின் கதாப்பிரசங்கமும் வித்துவான்கள், பண்டிதர்களினது சொற்பொழிவுகளும் நடைபெற்று 21ம் திகதி காலை 7 மணிக்கு அம்மை அப்பன் இடபவாகனமீது ஆயிரக்கணக்கான பக்தர்களின் அரோகராக் கோஷத்துடனும் திருக்கேதீஸ்வர வித்தியாலய மாணவ மாணவிகளினதும் பக்த கோஷ்டிகளினதும் பசனையுடனும் பாலாவி நதிக்குச் சென்று தீர்த்தம் ஆடி திருவீதி வலம் வந்து பக்தர்களுக்குக் காட்சி அளித்துக் கோயில் புகுந்தனர்.

திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் மடத்திலும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மடத்திலும் நகரத்தார்மடத்திலும் அன்னதானம் வழங்கப்பட்டது. சன்னிதானத்தில் சைவ சித்தாந்த சரபம் ஸ்ரீலஸ்ரீ ஈசான சிவாச்சாரியசுவாமிகள் சொற்பொழிவாற்றி முடித்ததும், பக்தி மேலீட்டால் ஸ்ரீமதி V. K. சின்னையா அவர்கள் கையில் அணிந்திருந்த தங்க வளையல் இரண்டையும் திருக்கேதீஸ்வர ஆலயத் திருப்பணிக்காகக் காணிக்கை செலுத்தினர். —நிரு.

# மாணவர் — பாடிகாவலர் கலக விசாரணை

சர்வகலாசாலை மாணவர்களுக்கும் பாடிகாவலர்(பொலீஸ்) பகுதியாருக்குமிடையில் குழப்பம் நடந்து பாடிகாவலப்பகுதியாரே முறையினமாக நடந்தார்களென்று மாணவர் முதல் மந்திரிக்கு முறையிட்டனர். வேண்டிய விசாரணை செய்வதாக முதல் மந்திரி வாக்களித்திருக்கின்றார்.


# கோட்டு விற்பனவு விளம்பரம்

சுளிபுரம் காலம் சென்ற கதிரவேலு சின்னையாவின் தத்துவ வழக்கு.

சுளிபுரம் கதிரவேலு சின்னையா மைமபெண் தெய்வானையகம்

—தத்துவகாரி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 1485 - ம் இலக்கத் தத்துவ வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1955-ம் ஆண்டு பங்குனி ௴ 12ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

## காணி விபரம்

சங்கானை கோவிற்பற்று சுளிபுரம் இறை இத்திப்புலோ சிலைப் பரப்பு 8 கல்வீடும் வான்பயிர்களும், எல்லை கிழக்கு கந்தையா சிதம்பரப்பிள்ளைக்குரிய ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு கணபதிப்பிள்ளை சுப்பிரமணியத்திற்குரிய ஆதனம், தெற்கு சங்கரப்பிள்ளை கதிரவேலுவுக்கும் குணரத்தினம் பெண் செல்லத்துக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலில் சொரியலாய் ⅜ பங்கு விற்கப்படும்.

இந்தக்காணிஈட்டுஉறுதிஇலக்கம் 1648 திகதி 3-8-1949 பிறக்கிராசி T. சங்கரப்பிள்ளையால் எழுதப்பட்ட ஈட்டு உறுதிப்படி காலம் சென்ற கதிரவேலு சின்னையாவும் சி.முத்துக்குமாரசுவாமியும் சேர்ந்து எழுதியது ஒருமித்தும் தனித்தும் பணம் கொடுப்பேமென்று, சுழிபுரம் குணரத்தினமிடமிருந்து கடனாக வாங்கிய ரூபா 3600 இதற்கு வட்டி 7 வீதம் வருஷந்தோறும் வட்டிகொடுத்தால் 6 வீதம் சி. முத்துக்குமாரசுவாமியின் இந்த ஆதனத்தில் மிகுதியான ¼ கால் பங்கும் இந்த ஈட்டில் சேர்க்கப்பட்டது.

த. ஆறுமுகம்,
கொமிஷனர்,

சித்தங்கேணி
10 2 1955,
M, 4 4—3—55.


# அணிந்துரை அரங்கம்

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் தேவாரத் திருப்பதிகங்கள்

( இரண்டாவது திருமுறை )

இது தருமபுர ஆதினம் இருபத்தைந்தாவது குருமகா சந்நிதானம் அவர்களின் திருவருளாணையின்படி தருமபுர ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூசைவிழா மலராய், தருமபுர ஆதினப் புலவர் திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்களின் குறிப்புரைகளுடன் வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்களால் சிறப்புறப் பதிப்பித்து வெளியிடப்பெற்றது.

சைவப் பணியில் நெறிமுறை நின்று தொண்டாற்றும் இந்த ஆதின வெளியீடுகள் சமய வளர்ச்சிக்குப் பெருந்துணையாயுள்ளன அவ்வாறே இப் பதிப்பும் எழிலுடன் விளங்குகின்றது.

பிரதி ஒன்று விலை: ரூ 5.00

கிடைக்கும் இடம்:
1. அதிபர், தருமபுரம் ஆதீனம் தருமபுரம் மாயூரம்.
2. ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானம், வைத்தீஸ்வரன் கோவில், சீகாழி தாலுக்கா.
3. ஸ்ரீ சடையநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.
4. ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானம் திருக்கடவூர், மாயூரம் தாலுக்கா,
5. ஸ்ரீ கம்பகரேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம், திருவிடைமருதூர்.
6. ஸ்ரீ அருணஜடேஸ்வரசுவாமி தேவஸ்தானம், திருப்பனந்தாள் கும்பகோணம் வழி.
7. சென்னை சமயப்பிரசார நிலையம், 41, லஸ்மான் ரோடு சென்னை, 17.

## மன்மத வருஷ வாக்கியபஞ்சாங்கம் 1955—56

இது யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாதையர் அவர்களாற் கணிக்கப்பெற்று வழக்கம்போல் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிடப்பெற்றிருக்கின்றது. இது பாரம்பரியமாகக் கணிக்கப்பெற்று வெளியாகும் பழைய பஞ்சாங்கமாகும்.

விவாகப் பொருத்தம் பற்றிய குறிப்புகள் பல புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன குறிப்பிடத்தக்கது.

பிரதி ஒன்று விலை ரூபா 1.00

x x x

## மன்மத வருஷ திருக்கணித பஞ்சாங்கம் 55—56

இது யாழ்ப்பாணம் மட்டுவில் பிரம்மஸ்ரீ சி. சுப்பிரமணிஐயர் F.R.A.S அவர்களாற் கணிக்கப்பெற்று வழக்கம்போல அழகுற அச்சிட்டு வெளியிடப்பெற்றிருக்கின்றது

பிரதி ஒன்று விலை ரூபா 1.00


# அடைவு நகை விற்பனவு விளம்பரம்

அரசாங்கஉத்தரவுடன் அடைவு பிடிக்கும் காம்பன், ஊர்காவற்றுறை வீ. தம்பிப்பிள்ளை அவர்களின் அடைவு கடையில் அடைவு வைத்துத் தவணை தப்பி மீட்கப்படாதிருக்கும் பின்னால் விபரிக்கப்படும் நகைகள் என்னால் 1955ம் ௵ பங்குனி ௴ 19ம் திகதி முற்பகல் 9 மணி தொடக்கம் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்,

நகைகளின் விபரம்:

| அடைவு இலக்கம் | திகதி | பெயரும் விலாசமும் | தொகை | நகை விபரம் |
|---|---|---|---|---|
| 7277/169 | 14-9-53 | ச. கணபதிப்பிள்ளை செருத்தீவு | 80-00 | ஒருகைச் சங்கிலி |
| 7417/18 | 2-10-53 | க. சிவசோராசா வேலணைகிழக்கு | 40-00 | ஒரு புரூச்சு |
| 7696/297 | 31-10 53 | ஆ பொன்னம்பலம் சுருவில் | 10-00 | ஒரு பொன்கூடு |
| 7883/282 | 30-11-53 | க இளையபிள்ளை களிக்கை காம்பன் | 10-00 | ஒரு வளையல் |
| 8157/166 | 23-12-53 | அ. பொன்னுத்துரை வேலணைகிழக்கு | 125-00 | 2சோடி வாளில் |
| 8158/167 | 23 12 53 | அ பொன்னுத்துரை வேலணைகிழக்கு | 250-00 | ஒருதாலிக்கொடி |
| 8220/229 | 30-12-53 | மு. சிவஞானம்பலம் புளியங்கூடல் | 15-00 | ஒருசோடி தோடு |
| 8348/115 | 13-1-54 | பி அர்ச்சோதிப்பிள்ளை ஊர்காவற்றுறை | 15-00 | ஒருசோடிதோடும்தூக்கமும் |
| 8408/175 | 22 1-54 | ச கணபதிப்பிள்ளை செருத்தீவு | 150-00 | ஒருதாலிக்கொடி. |
| 8435/202 | 25-1-54 | அ. மனவல், காம்பன் | 120-00 | ஒருசங்கிலியும் அடையாளமும் |
| 8434/50 | 3-2-54 | க. நல்லதம்பி சரவணை மேற்கு | 15-00 | ஒரு தாலி |

1955ம் ௵ பங்குனி ௴ 1ம் ௳

வை. ஏரம்பமூர்த்தி
Auctioneer.

M. 3 4, 11—3—55,

